**பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் ("கம்பனி") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயத்தினுடைய வலியுறுத்தல்**

முனைப்பழியுள்ள எனது அபிப்பிராயம் இல்லாமல், நிதிக்கூற்றுக்களின் விளக்கக்குறிப்பு இல. 2.5 இற்கு தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன். இது பின்வருவனவற்றை விளக்குகினறது;

2017 ஆம் ஆண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனம் எதிர்காலத்தில் கலைக்கப்பட வேண்டுமென தீர்மானித்திருந்ததுடன் 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- வங்கியின் செயல்படாத முற்பண நிலையை நிர்வகிக்க பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டடை கடன் மீட்பு சேவை வழங்குநராக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- 1988 ஆம் ஆண்டின் 30 இலக்க வங்கிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கமைய பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டடை கடன் மீட்பு சேவை வழங்குநராக மாற்றும் முன்மொழிவுக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஒப்புதலைப் பெறுதல்.

- பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்பதன் மூலம் நிறுவனத்தின் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஒரு சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

" நிதி நிறுவனங்களின் கடன் மீட்பு முகவராக செயற்படுதல் மற்றும் எல்லா வகையான மற்றும் விபரங்களுக்கமைவாக கடன் மீட்புச் சேவையை வழங்குதல்"

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான

எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனி தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனம் எதிர்காலத்தில் கலைக்கப்பட வேண்டுமென தீர்மானித்திருந்த போதிலும், 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் நிறுவனத்தை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு வங்கியின் செயல்படாத முற்பண நிலையை நிர்வகிக்க கடன் மீட்பு சேவை வழங்குநராக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையான ஒப்புதல்களுடன் மற்றும் செயல் முறையை விரைவுபடுத்த பரிந்துரைக்கப்படுகின்றது. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 அக்டோபர் 06 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர் குழு கூட்டத்தில் ரூபா 343,618 பெறுமதியான நீண்ட கால பெறுவனவை பதிவழிப்பு செய்வதற்கான தீர்மாணத்தை நிறைவேற்றியது. தொடர்புடைய தரப்பினரிடமிருந்து ஆவணச் சான்றுகள் இல்லாததால் இதனைச் சரி பார்க்க முடியாதுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் எதிர்கால குறிப்புக்காக பாதுகாப்பாக வைக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |

### 1.6.2 கொடுக்க வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 அக்டோபர் 06 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர் குழு, கூட்டத்தில் ரூபா.340,256 பெறுமதியான நீண்ட காலமாக செலுத்த வேண்டிய நிலுவையை ரிவசிங் ஜர்னல் பதிவின் மூலம் பதிவழிக்க தீர்மாணித்திருந்தது. உரிய ஆவணச் சான்றுகள் இல்லாததால் இதனைச் சரி பார்க்க முடியாதுள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் எதிர்கால குறிப்புக்காக பாதுகாப்பாக வைக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 47,690 நட்டம் மற்றும் அதற்கு நேரொத்த முந்தைய ஆண்டின் நட்டம் ரூபா 53,727 ஆகும். எனவே நிதி விளைவுகளில் ரூபா 6,037 தொகையான சரிவு காணப்பட்டது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கம்பனி செயற்பாட்டு வருமானத்தை ஈட்டவில்லை மற்றும் பங்கிலாப வருமானம் ரூபா 2 மட்டுமே நிறுவனத்தின் ஒரே வருமானமாக இருந்ததுடன் நிர்வாகம் மற்றும் நிறுவுதல் செலவுகளாக ரூபா 44,330 செலவிடப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் மனிதவளத் தேவைகளை எளிதாக்கும் வகையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதே இந் நிறுவனத்தின் முக்கிய வணிகச் செயல்பாடாகும். நிறுவனம் 2007 முதல் இம் முக்கிய நடவடிக்கையில் ஈடுபடவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை உருவாக்கிய நோக்கம் அடையப்படுவதை உறுதி செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. |